# பொறியாளர் அணி

## I. "நான் முதல்வன்" திட்டம்

நமது கழகத் தலைவர், தமிழ்நாட்டு முதலமைச்சரின் செல்லப் பிள்ளையான இந்தத் திட்டம் பல லட்சக்கணக்கான மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினைப் பெற்றுத் தரக் கூடியது. இந்தத் திட்டத்தின் பயன்களை பரவலாக மாணவர்களிடம் கொண்டு சேர்க்கும் வாகனமாக திமுக பொறியாளர் அணி விளங்கும். மேலும், பொறியாளர் அணி மூலம் துறைசார் வல்லுநர்களை அழைத்து "நான் முதல்வன்" திட்டப் பாடங்களை, பயிற்சிகளை மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு எடுக்க வைக்கும்.

## II. அனிதா சாதனையாளர் மன்றம்

### (Anitha Achievers Academy)

தங்கை அனிதா பெயரில் மாவட்டத்துக்கு ஒரு பயிற்சி மையம் அமைப்பது. அதன் மூலம் பெண்களுக்கு அவரவர் பகுதியிலேயே அல்லது வீட்டில் இருந்தபடியே டேட்டா எண்டரி, டேலி (Tally) போன்ற தொழில்நுட்பங்களைப் பயிற்றுவித்து சான்றிதழ் வழங்குவதை பொறியாளர் அணி மேற்கொள்ளும்.

இந்தத் திட்டம் ஏற்கனவே முதல்வரின் தொகுதியான கொளத்தூரில் பொறியாளர் அணியால் செயல்படுத்தப் பட்டு வருகிறது.